Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி எண்: 49

மலர் 16 பராபவ வருஷம் குரோதி தை 12-ம் நாள் ரம்ழான் பிறை 21 (25 1 65) திங்கட்கிழமை இதழ் 34

நங்கையர்
விரும்பும
அழகிய
தங்கபபவுண்
நகைகளை
தயாரிதது
அளிபபவர்கள்
விஜயலெட்சுமி ஆபரண மாளிகை
ஓடர்
நகைகள்
உடனுக்குடன்
செய்து
தருவோம்.
ஆஸ்பத்திரி வீதி,
ஊர்காவற்றுறை

# சர்ச்சில் மறைந்தார்

## 20-ம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற மாமேதை:

## 10 நாள் காலனுடன் போராட்டம் நடத்தியபின் ஆவிபிரிந்தது

லண்டன், ஜன. 24

**மனித வரலாறு மறக்க முடியாத மகாமேதையும், சரித்திரப்புகழ் பெற்றவரும், பிரிட்டிஷ் யுத்தகாலத் தலைவருமான 90 வயதுள்ள சர். வின்ஸ்டன் சர்ச்சில் இலங்கை நேரப்படி இன்று பகல் சுமார் 1-30-க்கு லண்டனில காலமானர்.**

அவர் சுகவீனமடைந்த நாள் முதல் கடைசிநேரம்வரை அன்னாரின் உயிருக்காகப் பிரார்த்தனை செய்த பல தலைவர்கள் சர்ச்சில் மறைவு உலகினுக்கு ஏற்பட்ட மற்றுமொரு பேரிடி என்று தெரிவித்துள்ளனர்.

கடந்த பத்து நாட்களாக ஜீவமரணப் போராட்டத்தில் இருந்த சர். வின்ஸ்டன் சர்ச்சில், இன்று காலமானதைத் தொடர்ந்து பிரிட்டிஷ் அரசியல் வாழ்விலும் சோகம் படர்ந்தது

### பல்வேறு திறமைகள்



சர் வின்ஸ்டன் லியனர்ட் ஸ்பென்ஸர் சர்ச்சில் ராணுவ வீரராகவும், சரித்திர ஆசிரியராகவும், நூலாசிரியராகவும், ஆங்கிலமொழி வல்லுனராகவும், போர் வீரராகவும், ராஜதந்திரியாகவும், தலைசிறந்த நாவன்மை கொண்டவராகவும் சைத்ரீகராகவும் பலதுறைகளில்மேதாவிலாசம்பெற்றிருந்தார்,

போர்த் தந்திரங்களிலும், வீராவேசப் பேச்சுகளிலும் சென்ற யுத்தத்தில் ஹிட்லரை முறியடித்து உலகத்தைக் காப்பாற்றிய தீரராக அவர் வெளிவந்தார்.

மேற்கு லண்டனிலுள்ள தனது ஹைட்பார்க மாளிகையில் சர்ச்சில் காலமானபோது அவரது மனைவி, மகன் ரண்டோல்ப் சர்ச்சில், மகள் ஸாரா, மற்றும் உறவினர்கள் ஆகியோர் அருகிலிருந்தனர்.

### ராஜாங்க மரியாதை

காலஞ்சென்ற சர்ச்சிலுக்கு ராஜாங்க மரியாதைகளுடன் இறுதிச்சடங்கு நடைபெறவிருக்கிறது. வெஸ்ட்மினிஸ்டர் தேவாலயத்தில் அரசாங்க மரியாதையுடன் அவரது பூதவுடல் வைக்கப்படும். முடிசூடிய மன்னர்களுக்கும், மன்னர்களின உறவினர்களுக்குமே இத்தகைய மரியாதை அளிக்கப்படுவதுண்டு.

### இந்தியாவில் கொடிகள் தாழ்ந்தன

சர்ச்சிலின் மரணச் செய்தி இந்தியாவுக்குக் கிடைத்ததும் புதுடில்லியிலும், ராஜ்யத் தலைநகரங்களிலும் உள்ள சகல அரசாங்கக காரியாலயங்களிலும் கொடிகள் அரைக்கம்பங்களில் பறக்கவிடப்பட்டன,

சர்ச்சில் தன் 24 வயதுக்குள் கியூபா, இந்தியா, எகிப்து ஆகிய நாடுகளில் போரில் கலந்துகொண்டுவிட்டு, பின் தன் 26வது வயதில பிரிட்டிஷ் பார்லிமெண்ட் அங்கத்தினரானர்.

### மனமாற்றம்

இந்திய சுதந்திரத்தை ஆரம்பத்தில் அவர் எதிர்த்தபோதிலும், பின்னல் மனமாற்றம் கொண்டுவிட்டதாகக் காலஞ்சென்ற நேருவிடம் கூறியதாய், வாஷிங்டன் டெலிவிஷன் பேட்டியில் திரு. நேரு கூறியிருந்தார். விடுதலைக்குப் பின் இருவரும நேசமாய் இருந்ததாக திரு நேரு அப்போது கூறினர்.

### அமைதியாக உயிர்விட்டார்

சர்ச்சில் எவ்வித வலியுமின்றி அமைதியாக உயிர்விட்டதாக அறிவிக்கப்பட்டது.

அவரது உடல் வெஸ்ட்மினிஸ்டர் தேவாலயத்தில் 3 தினங்களுக்கு வைக்கப்பட்டபின் வருகிற 30ந் திகதி அவரது தந்தையின் கல்லறைக்கு அருகில் அடக்கஞ்செய்யப்படும்

உலகத் தலைவர்கள் பலர் இறுதிச்சடங்கில் கலந்துகொள்வார்கள். இந்தியாவின் சார்பில் 'காபினெட்' மந்திரியொருவர் இறுதிச்சடங்கில் பங்குபற்றுவார்

காங்கிரஸ் தலைவர் காமராஜ், அமெரிக்க உதவி ஜனாதிபதி திரு ஹம்ப்ரே, பிரெஞ்சு அதிபர் டிகால் ஆகியோர் உலகத்துக்கு ஏற்பட்ட நஷ்டம் பற்றி வருத்தம் தெரிவித்திருக்கிறார்கள்.

சர்ச்சிலின் மரணத்தை முன்னிட்டு லண்டனில் நடத்தப்படவிருந்த இந்திய குடியரசு தின வைபவத்தை இந்திய ஹைகமிஷனர் ரத்துச்செய்திருக்கிறார்.

ருஷ்ய செய்தி ஸ்தாபனம் "டாஸ்" 400 வார்த்தைகளில் சர்ச்சிலுக்குப் புகழ்மாலை சூட்டியிருக்கிறது.

சர். வின்ஸ்டன் சர்ச்சில் கடந்த வியாழக்கிழமை கடும் சுகவீனமுற்றார். அவரது மூளையிலுள்ள இரத்த நாளமொன்று வெடித்ததைத் தொடர்ந்து அவருக்கு சுகவீனம் ஏற்பட்டது. சர்ச்சில் சுகவீனமுற்ற செய்தி வெளியானதைத் தொடர்ந்து உலகின் கவனம் லண்டன் நகரமே அதிகமாக திரும்பியிருந்தது. நூற்றுக்கணக்கானவர்கள், சர்ச்சிலின் இல்லத்துக்கு வெளியே நின்று அவரின் சுகத்துக்கு பிரார்த்தனை செய்துகொண்டிருந்தார்கள். அமெரிக்க அதிபர் திரு. ஜோன்ஸன்

(6-ம் பக்கம் பார்க்க)

## 'மாயசக்திபடைத்தவர்: சரித்திரத்தை உருவாக்கியவர்'

### சர்ச்சிலுக்கு உலகத்தலைவர்கள் பாராட்டு

லண்டன், ஜன. 24

சர்ச்சிலின் மரணச் செய்தியைக் கேட்டு இலங்கைப் பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்கா சர்ச்சில் சீமாட்டிக்கும், பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் தமது அனுதாபத்தைத் தெரிவித்திருக்கிறார்,

#### மகாராணி

மகாராணி எலிஸபெத், செய்தியில சர் சர்ச்சிலின் மரணத்திஞல் தனக்கும், தன் கணவருக்கும் விவரிக்க முடியாத துக்கம் ஏற்பட்டிருக்கிறது எனக் கூறியிருக்கிறார். ஸ்ரீமதி சர்ச்சிலுக்கும் அவர் அனுதாபச் செய்தி அனுப்பினர்.

#### பிரிட்டிஷ் பிரதமர்

'உலகெங்கும் துயரம் ஏற்பட்டிருக்கிறது. அவர் வாழ்வின் ஒரு சரித்திரமே உருவாயிற்று. சரித்திரத்தைப் படைத்தவர் சர்ச்சில். சரித்திரம் படிக்கப்படும்வரை அவர் நினைவு இருக்கும்" என பிரிட்டிஷ் பிரதமர் அறிவித்தார். உலக அரங்கில் பேருரு மறைந்துவிட்டதென்றும் அவர் கூறினர்.

#### ராதாகிருஷ்ணன்

இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் மகாராணிக்கு அனுப்பியுள்ள செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது.-

"நாம் அறிந்த ஆங்கிலேயர்களில் மிகப் பெரிய சர்ச்சில் மறைந்தது இந்திய அரசாங்கத்துக்கும், இந்திய மக்களுக்கும் துக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. மனிதரைக் கவரும் அவரது மாயசக்தியும், சொல்வன்மையும் போருக்குப் புத்துயிரளித்து ஐரோப்பாவிலும், இதர உலகிலும் அவரது சுவட்டைப் பதிப்பித்தது பல நூற்றாண்டுகளுக்கு அவரது பெயர் போற்றப்படும். கோடிக்கணக்கானமக்களின் துயரத்தை இந்திய மக்களும் பகிர்ந்துகொள்ளுகிறார்கள்"

"மனித வரலாற்றின் மாபெரும் மனிதர்களில் ஒருவர்" என உப ஜனாதிபதி டாக்டர் ஸகிர் ஹுஸைன் அனுப்பியுள்ள செய்தியில் கூறுகிறார்.

#### சாஸ்திரி

"முதுபெரும் தலைவர் மறைவு கேட்டுப் பெருந் துயர் அடைகிறேம். திரு சர்ச்சில் கடைசிப் போரையும் நடத்திவிட்டார். துணிகரச் செயலுடன், அவர் அற்புதங்களை நிகழ்த்தினர்" என இந்தியப் பிரதமர் சாஸ்திரி சீமாட்டி சர்ச்சிலுக்கும், பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் அனுப்பிய செய்தியில் கூறியிருக்கிறார்,

வெளிநாட்டு மந்திரி சர்தார் சுவர்ணசிங்சாம்ராஜ்ய மந்திரி திரு பொட்டம்லிக்கு அனுதாப

(6-ம் பக்கம் பார்க்க.)

அரியதோர் சந்தர்ப்பம்! போன்: 296

S. R. S.

ஜவுளி மாளிகையில்

உள்ளூர்

கைத்தறி சேலைகள்

(நித்திய பாவனைக்கேற்றவை)

அநேக டிசைன்களில்

சகாயமான விலைகளில்

மொத்தமாகவும் - சில்லறையாகவும்

பெற்றுக்கொள்ளலாம்.

உள்ளூர் கைத்தறி உற்பத்தியாளர்கள்

தங்கள் தயாரிப்புகளை எங்களிடம்

விற்பனை செய்யலாம்.

எஸ். ஆர். செல்லத்துரை

216, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாசகம்

பக்தியில்லாத சங்கீத ஞானத்தால் மட்டும் எவ்வித பயனுமுண்டா? மனமே! அவ்வித இசையால் இன்பமோ, கதி மோட்சமோ உண்டா?

— ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள்.


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு தை மீ 12 உ (25-1-65)


## இந்திய ஒற்றுமைக்கு ஆபத்து

அந்நிய ஆட்சியிலிருந்து இந்திய நாடு பூரணமாக விடுதலை பெற்று குடியரசான தினம் நாளை கொண்டாடப்படுகிறது. தேசிய ஒற்றுமையை வளர்க்க வேண்டிய இத்தினத்தில் ஆட்சிமொழி அமுல் தீர்மானத்தின் மூலம் தேசிய ஒற்றுமையைக் குலைக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பது துரதிருஷ்டவசமாகும்.

இந்தி ஆட்சிமொழியாவதால் இந்திபேசாத மக்களுக்கு எவ்வித பாதகமும் நேரமாட்டாதென்று மத்திய அரசாங்க மந்திரிகளும் ராஜ்ய அரசாங்க மந்திரிகளும் உறுதியளிக்கின்றனர். காலஞ்சென்ற பிரதமர் நேருவும் இதே வாக்குறுதியை அளித்திருந்தார். மத்திய அரசாங்கத்திலும், மத்திய அரசாங்கத்துக்கும் ராஜ்ய அரசாங்கங்களுக்குமுள்ள அலுவல்களிலும் இந்தியுடன் ஆங்கிலமும் தொடர்ந்து உபயோகத்திலிருந்து வரும் என்று 1963 ம் வருடத்திய உத்தியோக மொழிச்சட்டம் உறுதியளித்திருக்கிறது. ஆனால் சில அமைச்சகங்கள் மீபத்தில் விடுத்துள்ள உத்தரவுகளும் இந்திவெறியர்களின் சில நடவடிக்கைகளும் சென்னை "இந்து" பத்திரிகை கூறுவதுபோல் இந்த வாக்குறுதிகள் மீது நம்பிக்கை வைக்கக் கூடியதாகத் தோற்றவில்லை. இந்தி ஆட்சிமொழியானால் இந்தியல்லாதமொழிகளும் இந்திபேசாத பகுதி மக்களும் இரண்டாந்தர இடத்துக்கு ஒதுக்கப்படக்கூடும் என்ற இந்திபேசாத மக்களின் பீதியைப் போக்கக்கூடியதாகவும் இல்லை. சில அமைச்சகங்களின் நடவடிக்கையும் இந்திவெறியர்களின் செயல்களும் இந்தி பேசாத மக்கள் மீது இந்தி வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படக்கூடும் என்று பீதியடைவதற்கு ஏதுவாகவுள்ளன. இந்நிலையில் இந்தி ஆட்சிமொழி அமுலை இந்தி பேசாத மக்கள் எதிர்ப்பது நியாயமானதல்லவென்று கூற முடியாது. இந்தி நாடு முழுவதும் ஆட்சிமொழியாக அமுலுக்குக் கொண்டுவரப்படவிருக்கும் நாளைய தினத்தைத் துக்கதினமாக அனுஷ்டிக்க ஓர் அரசியல் கட்சியினர் தீர்மானித்திருக்கின்றனர். இது எவ்வகையிலும் ஜனநாயகத்துக்கு விரோதமானதென்றும் சொல்லிவிட முடியாது.

நாட்டை வெளி அபாயங்கள் சூழ்ந்துள்ள இச்சமயத்தில் ஆர்ப்பாட்டங்களும் கிளர்ச்சிகளும் செய்வது தேசிய விரோதமான செயல் என்று அமைச்சர்கள் கூறுகின்றனர். உண்மைதான். ஆனால் வெளி அபாயங்கள் சூழ்ந்துள்ள இச்சமயத்தில் நாட்டின் தேசிய ஒற்றுமையைக் கெடுக்கக்கூடிய மொழிச் சட்டத்தை அவசரப்பட்டு அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமா? அரசாங்கத்தின் இந்நடவடிக்கை நாட்டைப் பிரிவினை செய்யக் கூடுமென்று அரசியல் அனுபவமுள்ள ராஜாஜி போன்ற தலைவர்கள் கூறியிருப்பதை அலட்சியம் செய்துவிட முடியாது. அரசியல் சாஸனத்தில் இதுவரை பதினேழு திருத்தங்கள் செய்யப்பட்டு விட்டன. உத்தியோக மொழி அமுலை பற்றியும் திருத்தம் செய்வதால் ஒன்றும் கெட்டு போய் விடாது. தேசிய ஒற்றுமையையும் நாட்டின் நலனையும் கருத்தில் கொண்டு இந்திவெறியர்களுக்கு இடம் கொடாமல் உத்தியோக மொழி அமுல் விஷயத்தில் மத்திய அரசாங்கம் இந்தி பேசாத மக்களின் கருத்தையறிந்து நிதானமாகச் செயலாற்ற வேண்டியதே அரசியல் ஞானமாகும்.

## பஜனைச் சபை ஆண்டுவிழா

சுழிபுரம், ஞாயிறு

ஒரு கிராமத்தின் சிறப்பு மேன்மை அக் கிராமத்திலே ஆலயத்தின் சிறப்பில் தான் தங்கியுள்ளது. எமது ஆலயங்கள் போதிக்கும் உயர்ந்த தத்துவம் பொதுவுடைமையே யாகும். பொதுவுடைமை பேசுபவர்களிடம் காண முடியாத ஆற்றலை சக்தியை ஆலயங்களில் காணலாம்" என்று பண்ணாகம் தெற்கு விசவத்தனை முருகமூர்த்தி கோவில் பஜனைச் சபையின் 13-வது ஆண்டு விழாவுக்கு தலைமை வகித்துப் பேசுகையில் திரு. கே. பிஹரன் கூறினார்.

விசேஷ பூசைகள், மேளக் கச்சேரிகள் நடைபெற்று சுவாமி வீதிவலம் வந்த பின்னர் வி. க. ஆறுமுகம் முகம் பக்தநந்தனார் என்னும் பொருள் பற்றி வில்லுப்பாட்டு நிகழ்த்தினர். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு திரு. கே. பிஹரன் பரிசில்கள் வழங்கினர்.

## "எங்களை அனுப்புங்கள்"

கொழும்பு, ஞாயிறு

"எங்களுடைய அபேட்சகர்கள் எங்கு போட்டியிடுகின்றார்களோ அவர்களை எல்லாம் பாராளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். அப்பொழுது தான் தொழிலாளர்களின் உண்மையான குரலை நாம் பாராளுமன்றத்தில் கேட்கலாம்" என்று கொழும்பு மத்திய தொகுதி அபேட்சகர் திரு. என். சண்முகதாசன் ஒரு கூட்டத்தில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

## நிதிக்கு நன்கொடை

கொழும்பு, ஞாயிறு

இலங்கை இந்தியர் வர்த்தக சபை அரசாங்க புயல் நிவாரண நிதிக்கு ரூபா 33 001 ஒரு காசோலையை பிரதமமந்திரியிடம் சமர்ப்பித்துள்ளது. இலங்கையிலுள்ள 11 இந்திய ஸ்தாபனங்களின் நன்கொடைகளும் இத் தொகையில் சேர்க்கப்பட்டுள்ளது. சென்னையிலுள்ள சேர் முத்தையா செட்டியார் ரூபா 10,000 'செட்டிநாட் கார்ப்பரேஷன்' மூலம் நிவாரண நிதிக்கு வழங்கியுள்ளார்.

## ஹிந்தி அமுல் குறித்து ஹிந்து பத்திரிகை கருத்து

26-ந் திகதி செவ்வாய்க்கிழமை, இந்தியாவில் ஹிந்தி உத்தியோக மொழியாக அமுல் செய்யப்படுவது குறித்து சென்னை ஹிந்து பத்திரிகை தனது தலையங்கத்தில் எழுதியிருப்பதாவது:

ஹிந்தி இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்த மாதம் 26-ந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட இருக்கிறது. சிறந்த முறையில் இந்த மாற்றத்தை அதிகாரிகள் கவனிக்காவிட்டால் ஆட்சி மொழி அமுலில் குழப்பம் தரக்கூடிய சில மாற்றங்கள் ஏற்படலாம். வருங்காலத்தில் அரசாங்கம் ஆங்கிலத்தை நிறுத்தி வைப்பதிலோ அல்லது மாற்றுவதிலோ கவனம் செலுத்தக்கூடாது உயர்தரகல்விக்கும்-நுண்கலைமுன்னேற்றத்திற்கும் ஆங்கிலம் ஒரு இன்றியமையாத மொழியாகவும் - தொடர்பு மொழியாகவும் இருந்து வந்திருக்கின்றது. ஆகையால் ஆட்சியாளர் ஆங்கிலத்தையும் ஹிந்தியையும் ஆட்சிமொழியாக ஒரே முறையில் உபயோகிக்க தொடங்குகின்றோம் என்பதை முதலில் மனதில் கொள்ளவேண்டும் ஹிந்தி மொழியை ஆட்சி மொழியாக விரைவிலேயே எல்லத் துறைகளிலும் நடைமுறைப்படுத்துவதால் ஹிந்தி தெரியாத மக்கள் தாங்கள் குறைபாடுள்ள நிலையில் இருக்க வேண்டுமென்று மனத்தில் பீதியும் சுயநம்பிக்கையும் கொள்வது இயற்கையே.

ஆட்சி மொழியின் 1963-ம் ஆண்டுச் சட்டம அந்த நிலையை ஆற்றுவதாக உறுதி கூறி தேசிய நலன் கருதி இருமொழிகளான ஆங்கிலம், ஹிந்தி உபயோகத்தை மத்திய அரசாங்கத்துடனும் மற்றும் ராஜ்யங்களுடனும் தொடர்பு கொள்ளுவதற்கான முறையில் பாதுகாப்பளித்திருக்கின்றது. ஹிந்தி மொழி தெரியாதவர்கள் மீது நாங்கள் எந்த வகையிலும் அவர்கள் ஏற்றுக்கொண்டால் தவிர ஹிந்தி மொழியைத் திணிக்கமாட்டோம். அத்துடன் ஆங்கிலமே ஆட்சி மொழியாக தொடர்ந்து உபயோகிக்கப்படும் என்று காலஞ்சென்ற பிரதமரின் உறுதியையும் இந்தச் சட்டம் பிரதிபலிக்கின்றது. மத்திய அரசாங்கத்தின் உள்நாட்டு மந்திரி காரியாலயத்திலிருந்து வெளியான கட்டளைகள் 1963-ம் ஆண்டு சட்டத்தின நோக்கங்களை பிரதிபலிப்பதாக தெரியவில்லை.

ஹிந்தியிலும் ஆங்கிலத்திலும் குறிப்புக்கள் உத்தியோகத் தோரணையில் எழுதுவது வேலைகளை ஒருவாறு துரிதப்படுத்துமெனினும், ஹிந்தி அல்லது ஆங்கில மொழியில் குறிப்புகள் எழுதப்படலாம் என்ற தேர்வுரிமையை குமாஸ்தாக்களுடைய தீர்ப்புக்கு விடுவது ஏன் என்பது தெளிவாகப் புரியவில்லை. இதனால் குமாஸ்தாக்கள் மத்தியில் தான் தோன்றியவை. எண்ணத்திற்கும் நடத்தைக்கும் இடமேற்படும். அத்துடன் ஹிந்தி மொழி பேசும் ராஜ்யங்களான பிஹார், மத்திய பிரதேசம் ஆகியவை ஏன் மத்திய அரசாங்கத்துடன் ஹிந்தியில் மாத்திரம் தொடர்பு கொள்ள அனுமதிக்கப்பட்டன என்பது புலனாகவில்லை. இதனால் மற்றைய இடங்களிலுள்ள மக்களுக்கு இந்த ஹிந்தி மொழியில் நடாத்தப்படும் தொடர்புகள் தெரியாமலிருப்பதுடன், சென்ற மாதம் ராஜ்யங்களின் மந்திரிகள் ஹிந்திமொழி உபயோகம் படிப்படியாகத்தான் நடைமுறைக்கு கொண்டுவரப்படும் என்று கொடுத்த சிபார்ஸுகளுக்கு எதிராகவும் இருக்கும் இதனால் ஹிந்தி மொழியில் பாண்டித்தியம் இல்லாத ராஜ்யங்கள் தங்கள் மீது ஹிந்தியை அதி தீவிரமாக திணிக்கப் [illegible] முன்னர் ஏற்றுக்கொண்ட [illegible] ஆங்

கிலத்தை தொடர்ந்து உடயே கிக்கும் என்ற விசேஷ சட்டத்தை நிறைவேற்றுவதற்கு விருப்பமில்லாதிருக்கும் இச் சமயத்தில் ஹிந்தி ஆர்வங் கொண்டவர்கள் தான் ஹிந்தி மொழி பேசமுடியாத மக்களுக்கு சிறந்த முறையில் உறுதியளிக்க வேண்டும். இல்லாவிட்டால் மேற்கூறப்பட்ட சட்டத்தை நிறைவேற்றும் எண்ணம் காற்றுடன் சென்று விடும்.

கூ. மொ. வி. யில்

## பதவி உயர்வுகள் ரத்தானது

கொழும்பு, ஞாயிறு

"ஏழு ஊழியர்களின் பதவி உயர்வுகளை ரத்துச்செய்வதென்று நேற்றுக் கூடிய கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் டைரக்டர்கள் சபை தீர்மானித்துள்ளது. இந்த ஏழு ஊழியர்களும் குமாஸ்தாக்கள் சேவையில் இரண்டாம் வகுப்பைச் சேர்ந்தவர்களாகும்.

இலங்கை வர்த்தக யூனியன், லங்கா சேவக சமிதி ஆகியவற்றின் கண்டனங்களைத் தொடர்ந்தே கூ. மொ. வி. டைரக்டர்கள் சபை மேற்கூறிய தீர்மானத்தை மேற்கொண்டது.

## ஒத்திகை அணிவகுப்புகள்

புதுடில்லி, ஜன 24

செவ்வாய்க்கிழமை இந்தியக் குடியரசு தினமாகும். இத்தினத்தை முன்னிட்டு தலைநகரில் இன்று ஒத்திகை அணிவகுப்புகள் நடைபெற்றன. ஆண்களும் பெண்களும் கலந்து கொண்ட இந்த அணிவகுப்புகளை ஆயிரக்கணக்கான மக்கள் இன்று கண்டுகளித்தனர். முப்படைகள் அணிவகுப்புகளும் இன்று இடம் பெற்றிருந்தன.

குடியரசு தினமன்று இந்திய கலாச்சாரத்தை விளக்கும் முகமாக கலாச்சார பவனி பொன்றும் இடம்பெறும். இந்தப்பவனியில் இருபது வண்டிகள் கலந்து கொள்ளும். இந்த வண்டிகளில் பண்டைய இந்திய கலாச்சார மரபுகளை விளக்கும் படங்களும் உருவ அமைப்புகளும் இடம் பெற்றிருக்கும்.

எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவுநின் தெய்வ அருட் கருணை செய்யாய் பராபரமே.

அன்பைப் பெருக்கியெனை தாருயிரைக் காக்கவந்த-இன்பப் பெருக்கே யிறையே பராபரமே.

— ஸ்ரீ தாயுமான சுவாமிகள்.

## ஜயாறன் எழுதுவது

கிளிநொச்சிக்குப் பக்கத்திலுள்ள 'தர்ம'புரத்திலே ஒரு பெண் குழந்தை ஐம்பது ரூபாய்க்கும், ஆண் குழந்தை நூறு ரூபாய்க்கும் விற்கப்பட்டுள்ளதாக ஒருசெய்தியைப் பார்த்து என்னைப்போல் பல அன்பர்களும் திடுக்கிட்டுப் போயிருப்பர்.

அக்கராயன் குளத்திலே கணவனை இழந்த ஒரு தாய் 7 வயது, 5 வயது நிரம்பிய 2 ஆண்பிள்ளைகளை வளர்க்க முடியாமல் விற்றுவிட்டதாயும், கிளிநொச்சிப்பகுதியில் கொடிய பஞ்சமென்றும், வயல்களில் வேளாண்மை இல்லை என்றும் நமது கிளிநொச்சி நிருபர் தெரிவிக்கின்றார்.

சூறாவளியைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள பஞ்சம் பசிக் கொடுமையால் தங்கள் அருமையாகப் பெற்றுவளர்த்த பிள்ளைகளையும் சில தாய்மார் விற்கும் பரிதாபமான சம்பவங்கள் ஏற்பட்டு வருகிறதாம் 'தரும'புரத்திலே! நமது 'தர்மம்' இன்றுபடும்பாடு இது தான் போலும்! இலங்கையே வெட்கப்படவேண்டிய செய்தி இது.

* * *

அந்த (அ) தர்மபுரத்திலுள்ள மக்கள் நிலைமை பற்றி அன்றே எழுதியிருந்தேன். பள்ளியிலிருந்து சோர்ந்து திரும்பும் குழந்தைகளுக்கு அவித்துக்கொடுக்க வாழைக்காயும் இல்லை என்று ஒரு தந்தை மனவேதனையுடன் சொன்னார்.

அங்கு குடியேறியுள்ள சுமார் 600 தமிழ்க்குடும்பத்தினரும், ஏழுவருடங்களுக்கு முன் அதாவது 1958-ம் வருட கலகத்துக்கு முன் அநுராதபுரம், பொலன்னறுவை முதலிய இடங்களில் நெல் வயல்களில் கமம்செய்து செழிப்பாக வாழ்ந்தவர்கள். கலகம் காரணமாக, தங்கள் உயிரையும் மானத்தையும் காத்துக்கொள்ள வடக்கு நோக்கி வந்து தஞ்சமடைந்தனர்.

தஞ்சமடைந்த இடத்திலும் அவர்கள் நிம்மதியாக உழைத்துவாழ முடியவில்லை. அவர்களுக்கும் பலப்பல சோதனைகள் ஏற்பட்டு வருகின்றன. 14 வாரகாலமாக அவர்கள் பங்கீட்டு அரிசியும்பெறவில்லை. தைப்பொங்கலின் போது ஈழநாடு' சூறாவளி கஷ்ட நிவாரண நிதியிலிருந்து ஒருவார ரேஷன் அரிசி இலவசமாக வழங்கப்பட்டது பற்றி அவர்கள் மனமார வாழ்த்தினர். அங்கு சில எளிய குடும்பத்தாருக்கு ரேஷன் புத்தகமே வழங்கப்படவில்லை என்றும் அவர்கள் ரேஷன் அரிசி பெறமுடியாமல், பிளாக்மார்க்கெட்டில் அதிகவிலை கொடுத்து வாங்கவும் முடியாமல், குஞ்சு குழந்தைகளுடன் பசிக்கொடுமையால் பரதவிப்பதாயும் கேள்விப்பட்டேன்.

மானத்தைமூட புடவையில்லாமல் பல தய்மார்கள் வீட்டைவிட்டு வெளிவரவும்முடியாமலுள்ளதாம். வேலை தேடிக்கொண்டு சில குடும்பங்கள் ஆனையிறவு முதலிய இடங்களுக்கு குழந்தைகளுடன் சென்றுள்ளனர். மழையில்லாததால் வயல்களெல்லாம் காய்ந்துவிட்டன. வேலையுமில்லை, இன்னும் சில காலத்துக்கு இப்படியே இருக்குமாயின் அவர்களில் பலரும் பசிக்கொடுமையால் மடிய வேண்டியதுதான். குழந்தைகளைச்சில காசுகளுக்கு விற்க வேண்டிய அளவுக்குப் பஞ்சம் ஏற்பட்டுள்ளதென்றால் பின்னர் கேட்பானேன்? இனி அந்தப் பிள்ளைகள் யாராரிடம் அடிமைகளாக என்னென்ன கஷ்டப்படவேண்டுமோ! அட தெய்வமே!

* * *

அவர்கள் இலங்கையரல்லவென்று இலங்கை அரசாங்கமும் இந்தியரல்லவென்று இந்திய அரசாங்கமும் அவர்

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

களை அலட்சியம் செய்து புறக்கணிக்கின்றனர். சில அநியாயச் சட்டங்களின்படி அவர்கள் இலங்கையரல்லாதாராக்கப்பட்டிருக்கலாம். ஆனாலும் அவர்கள் மனிதர்கள். இரு அரசாங்கங்களும் அந்த அரசியல் அனாதைகள் விஷயத்தில் சேர்ந்து சிரத்தை எடுத்து அவர்கள் பட்டினியால் சாகாமலும், பஞ்சத்தால் குழந்தைகளை விற்காமலும் காப்பாற்றக் கடமைப்பட்டுள்ளன. சட்டம் பேசும் இரு அரசாங்கங்களும் இதைச் செய்யுமென்று தோன்றவில்லை. ஆகவே தர்ம சிந்தையுள்ள பொது மக்கள்தான் தர்மபுரம் விஷயத்தில் விசேஷ கவனம் காட்டி, அவர்களது பசிப் பிணியை ஆற்றவேண்டும். திக்கற்ற அவர்கள்பால் கருணை காட்டுகிறவர்களுக்கு, தெய்வத்தின் கருணையும் அமோகமாகக் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "பொதுக்கூட்டம் நடத்தும் அனுமதி கிடைக்காது

## தடைகளை மீறினுல் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்"

### தி. மு. கழகத்தினருக்கு பக்தவச்சலம் எச்சரிக்கை

சென்னை, ஜன. 24

குடியரசு தினத்தன்று துக்க தினம் அனுஷ்டிக்க திராவிட முன்னேற்றக் கழகத்தினர் திட்டமிட்டிருக்கின்றனர். நாட்டு மக்களைப் புண்படுத்தக்கூடிய இந்த நடவடிக்கைகளை முறியடிக்க அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும். குடியரசு தினமான எதிர்வரும் செவ்வாய்க்கிழமை குறைந்தது ஒரு பொதுக் கூட்டத்தையாவது தி. மு. கழகத்தினர் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்று தமிழ்நாட்டு முதன்மந்திரி திரு பக்தவத்சலம் தமிழ்நாட்டு சட்டசபையில் கூறினர்.

**மாணவர்களுக்கு எச்சரிக்கை**

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மேற்கொள்ளும் இயக்கத்தில் மாணவர்கள் பங்குபற்றக் கூடாது என்று வன்மையாக எச்சரித்த திரு பக்தவத்சலம் ஊர்வலத்திலோ அல்லது ஆர்ப்பாட்டங்களிலோ மாணவர்கள் கலந்து கொண்டால் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் கூறினர்.

"26-ம் திகதி குடியரசுதினம் இந்திய மக்களின் ஒரு புனித தினமாகும் அன்று மரியாதைக் குறைவான ஆர்ப்பாட்டங்கள் எதையும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நடத்திஞல் அரசாங்கம் கண்டிப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இவ்வளவு புனிதமான ஒரு தினத்தை துக்கதினமாக அனுஷ்டிப்பது முற்றிலும் தவறானதொரு செயலாகும். இந்த நடவடிக்கை, தேசத்துரோக செயலுக்கு ஒப்பானதாகும்" என்றும் முதன்மந்திரி குறிப்பிட்டார்.

"துக்கம் இருந்தால் அதை வீட்டில் கொண்டாடலாம். ஆனல் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் முறையில் அதைக் கொண்டாட முடியாது. 25-ம் திகதி அமைதியான முறையில் தி. மு. கழகத்தினர் கூட்டம் நடத்தவும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்" என்றும் அவர் கூறினர்.

# "ஹிந்தி அமுல் திகதியை வேறு திகதிக்கு மாற்றுக"

### அண்ணுதுரை யோசனை

சென்னை, ஜன. 24

"ஜனவரி மாதம் 26-ம் திகதி குடியரசுதினத்தை மட்டும் அரசாங்கம் கொண்டாடினல் திராவிடமுன்னேற்றக்கழகம் துக்க தினத்தை அனுஷ்டிக்கமாட்டாது. ஆனல் அன்றைய தினம் ஹிந்தி மொழியை ஆட்சி மொழியாக அமுலாக்கினல் எமது கட்சி நிச்சயம் துக்க தினம் அனுஷ்டிக்கும், எமது நோக்கம் குடியரசு தினத்தை துக்கதினமாக அனுஷ்டிக்க வேண்டுமென்பதல்ல. ஹிந்தி அமுலை கண்டிப்பதே" என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு ஸி என். அண்ணுதுரை தெரிவித்துள்ளார்.

பொன்மலை அருகில் நடைபெற்ற கூட்டமொன்றில்தான் திரு ஸி. என். அண்ணுதுரை மேற்கண்ட யோசனையை வெளியிட்டார்.

"ஜனவரி மாதம் 26-ம் திகதி குடியரசு தினத்தை மட்டும் அரசாங்கம் கொண்டாடினல் நாம் எந்தவித துக்க அனுஷ்டிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடமாட்டோம். இந்த வகையில் அரசாங்கம் நடந்து கொள்ளுமேயானல் குடியரசு தின நிகழ்ச்சிகளிலும் நாம் கலந்து கொள்வோம். கடந்த ஆண்டுகளில் குடியரசு தினத்தை துக்கதினமாக அனுஷ்டிக்காததையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்" என்றும் அவர் தெரிவித்தார்.

"எனக்கும் ராஜாஜிக்குமிடையே பிளவுகளை உண்டு பண்ண காங்கிரஸ்காரர்கள் தீவிர முயற்சியெடுத்து வருகின்றனர் இது ஒருபொழுதும் பலிக்காது. எங்கள் இருவரையும் எவரும் பிரிக்க முடியாது" என்றும் திரு. ஸி என். அண்ணுதுரை கூறினர்.

## ஒலிபெருக்கி தடை!

### தி. மு. க. வினருக்கு

சென்னை, ஜன 24

இம்மாதம் 26-ம் திகதி குடியரசு தினத்தைத் துக்க தினமாக அனுஷ்டிக்கப் போவதாக திராவிட முன்னேற்றக்கழகம் அறிவித்திருந்ததைத் தொடர்ந்து, சென்னையில் பொதுக்கூட்டங்களில் ஒலிபெருக்கி ஏற்பாடுகளைச் செய்துகொள்ள பொலிஸ்பகுதி அனுமதி வழங்கமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது

## வர்த்தக உறவுகள்

ராவல்பிண்டி, ஜன. 24

சோவியத் வர்த்தக நிபுணர்கள் நேற்று பாகிஸ்தான் வர்த்தக பிரதிநிதிகளுடன் இங்கு பேச்சுகள் நடத்தினர் சோவியத் பாகிஸ்தான் வர்த்தக உறவுகளை வலுவடையும்வகையில் இந்தப் பேச்சுக்கள் அமைந்திருந்தன என்று பாகிஸ்தான் செய்தியொன்று கூறியது

சோவியத்—பாகிஸ்தான் வர்த்தக உறவுகள் குறித்து கடந்த மாதத்திலும் பேச்சுக்கள் நடைபெற்றன.

# ஹிந்தி பேசாத பகுதிகள் பாதுகாக்கப்படும்

### மந்திரி நந்தா உறுதி

புதுடில்லி, ஜன 24

"ஆட்சி மொழியாக ஹிந்தி அமுலாக்கப்பட்டாலும், ஹிந்தி பேசாத பகுதிகள் சிறிதளவும் இதனுல் பாதிக்கப்பட மாட்டாது" என்று இந்திய உள்துறை மந்திரி திரு. குல்சாரிலால் நந்தா தெரிவித்துள்ளார்.

"ஹிந்தி பேசாத பகுதிகளுக்கு போதிய பாதுகாப்பு அளிக்கப்படும் இந்தப் பகுதிகளில் வாழும் மக்கள் ஹிந்தி மொழியில் போதிய தேர்ச்சி அடையும்வரை அங்கு ஹிந்தி ஆட்சி மொழியாக்கப் படமாட்டாது. இப்பகுதிகளில் ஆங்கிலம் தொடர்ந்திருந்து வரும்" என்றும் திரு. நந்தா உறுதி கூறினர்.

தி. மு. வினருக்கு அவர் விடுத்துள்ள ஒரு வேண்டுகோளில்; எந்தவித அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டாமென்றும் குடியரசு தினத்தில் குழப்பம் உண்டு பண்ண வேண்டாமென்றும் தெரிவித்துள்ளார்.

## எடின்பரோ கோமகன்

### மார்ச் 9-ல் இந்தியா வருவார்

புதுடில்லி, ஜன. 26

எடின்பரோ கோமகன் மார்ச் மாதம் 9-ம் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்வார். டில்லியில் 4 தினங்கள் தங்கிய பின்னர் இவர் நேபாளத்துக்குச் சென்று மீண்டும் இந்தியா திரும்பி ஜய்ப்பூரில் 15-ம் திகதி தொடக்கம் 21-ம் திகதிவரை தங்கியிருப்பார்.

இந்தியாவில் சுற்று விஜயம் செய்யும் எடின்பரோ கோமகன் ஸவூதி அரேபியா, பஹ்ரீன், பாகிஸ்தான், மலேசியா, தாய்லாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்வார்.

## 3,00,000 டாலர் பெறுமதி அபின்

### சரக்குக் கப்பலில் கண்டுபிடிக்கப்பட்டது

வாஷிங்டன், ஜன 24

3,00,000 டாலர்கள் பெறுமதியுள்ள அபினை அமெரிக்க சுங்கப்பகுதியினர் கண்டுபிடித்துள்ளனர். இந்த அபின் இந்திய சரக்குக் கப்பல் ஒன்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தக் கப்பல் எத்யோப்பியா, மற்றும் தூரகிழக்கு துறைமுகத்திலிருந்து இங்கு வந்தது.

## திருமதி ஜோன்ஸனும் ஆஸ்பத்திரியில்

வாஷிங்டன், ஜன. 24

அமெரிக்க அதிபரின் பாரியார் திருமதி ஜோன்ஸன் நேற்று இங்குள்ள ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார் அதிபர் ஜோன்ஸனும் இருமல் ஜலதோஷம் காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். திருமதி ஜோன்ஸனுக்கு ஜலதோசம் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தென்வியட்னமில்

# அமெரிக்க நூலகம் முன் பெருமளவில் ஆர்ப்பாட்டம்

### ஆயிரக்கணக்கான புத்தகங்கள் எரிந்து சாம்பலாயின

சைகோன், ஜன. 24

தென்வியட்னமில் அரசாங்கத்துக்கும், பிரதமருக்கும் எதிராக நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள் நேற்று உச்சக்கட்டத்தை அடைந்தன.

சைகோனிலுள்ள அமெரிக்க தகவல் பகுதி நூல்நிலையத்தின் முன் ஆர்ப்பாட்டம் நடத்திய பலர், நூலகத்தின் யன்னல்களை உடைத்து நாசப்படுத்தியதுபின் அங்கிருந்த கதிரை மேசைகளையும் சேதப்படுத்தினர்.

ஆயிரக் கணக்கான புத்தகங்களை ஆர்ப்பாட்டக் காரர்கள் தீக்கிரையாக்கினர். அமெரிக்க தூதரகம் முன்பும் இவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அமெரிக்க அதிபர் ஜோன்ஸனுக்கு இவர்கள் அனுப்பியுள்ள கண்டனக் கடிதமொன்றில், தென்வியட்னமில் பௌத்த மதத்துக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கைகள் எடுப்பதை இவர்கள் வன்மையாக கண்டித்துள்ளனர்.

பௌத்த தலைவர்கள் நேற்று விடுத்துள்ள கோரிக்கையொன்றில், மதத்தைக் காப்பாற்றுவதற்காக பௌத்தர்கள் தீயில் குதித்து தற்கொலை செய்ய முன்வரவேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

தென் வியட்னம் பிரதமர் விடுத்துள்ள வானெலி செய்தியில், அமெரிக்காவுக்கும் தென் வியட்னம் பிரதமருக்கும் எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை உடனடியாகக் கைவிடுமாறு கேட்டுள்ளார்.

# "இயக்கங்கள் மூலம் வெற்றிகண்டோம்"

### காரைநகர் கூட்டத்தில் திரு. தர்மலிங்கம் பேச்சு

சுழிபுரம், ஞாயிறு

"தமிழ்பேசும் இனத்தின் உரிமைகளைப் பெறுவதற்கு நாம் நடாத்திய போராட்டங்கள் பல. அவற்ருல் நாம் அடைந்த துன்பங்கள், கூறமுடியாதவை" என உடுவில் தொகுதி மூலன் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் இலங்கைத் தமிழரசுக்கட்சி காரைநகர் கிளை ஆதரவில் நீலி பந்தனை சனசமூகநிலைய முன்றலில் வட்டுக்கோட்டைத் தொகுதி அபேட்சகர் திரு அமிர்தலிங்கத்தை ஆதரித்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினர். காரைநகர் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. சி. ஆ கணபதிப்பிள்ளை கூட்டத்திற்குத் தலைமை வகித்தார் தர்மலிங்கம் மேலும் பேசுகையில் அரசாங்கத்தின் சட்டங்களை ஏற்காது அவற்றை முறையற்றதாகவும் செயலற்றதாகவும் செய்வதற்கு பல பெரிய இயக்கங்களை நடாத்தி பூரண வெற்றியும் கண்டுள்ளோம் என்ருர். பல்வேறு பாதையில் சின்னபின்னப்பட்டுக் கிடந்த தமிழ்மக்கள் ஒரே குரலில் உரிமையைக் கேட்டதன் பயனகத்தான் பண்டா—செல்வா ஒப்பந்தம் மற்றும் சில பேச்சு வார்த்தைகள் மூலம் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் முன்வந்துள்ளது என்றும் சிங்களக் குடியேற்றத்தின் தீமையை நாம் சுட்டிக்காட்டி வந்ததன் பலனக பல பிரதேசங்கள் காப்பாற்றப்பட்டன என்றும் திரு. தர்மலிங்கம் கூறினர்.

திரு. ஆ. சபாபதிப்பிள்ளை பேசுகையில் இலங்கையில் சிங்கள ஆதிக்கம் சூழ்ந்து கொண்டு இருக்கிற இந்த நேரத்தில் அவ்வாதிக்கத்தை தடைசெய்யும் சக்தி தமிழரசுக் கட்சியிடம் மட்டுமே உண்டு என்ருர்.

திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் "தமிழ்பேசும்மக்களின் ஒரே இயக்கம் தமிழரசுக்கட்சிதான் என்பதை நாம் உலகுக்குக் காட்டிவிட்டோம். நாம் அற்ப சலுகைகள் பெறுவதற்காக பாராளுமன்றம் போகவில்லை. பாராளுமன்ற ஆசனம் கிடைத்தால் மட்டும் தான் எமதுசேவைதொடர்ந்து செய்யப்படும் என எவரும் எண்ணமாட்டார்கள் என்பதை எமது கடந்த காலக் கட்சியின் சேவையைக்கொண்டு பொதுமக்களே தீர்மானித்துக் கொள்ளட்டும். நாம் அன்று கூறியதைத்தான் இன்றும் கூறுகின்ருேம். தமிழ்பேசும் மக்களின் தீர்ப்பு எப்படியிருந்தாலும் எமக்கு வியப்பில்லை. ஆனல் பொதுமக்கள் யார் காட்டும்பாதை நல்லது, எமது நாளைய நிலைமை என்ன என்பதையும் சிந்திக்கவேண்டும்" என்ருர்.

## போர் நிறுத்தம் நீடிப்பு

கோஹிமா, ஜன. 26

நாகலாந்தில் பெப்ரவரி மாதம் 6-ம் திகதியுடன் முடிவடைவதாக விருந்த போர் நிறுத்தம், மேற்கொண்டு ஒரு மாத காலத்துக்கு நீடிக்கப் பட்டிருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

## நேதாஜி பிறந்ததினம்

புதுடில்லி, ஜன. 24

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் பிறந்ததினம் நேற்று நாட்டின் பல பகுதிகளிலும் கொண்டாடப்பட்டது.

கல்கத்தா, பட்னு, டில்லி, அமிர்தசரஸ், சென்னை ஆகிய இடங்களில் விசேஷ நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## லாரி கவிழ்ந்து 7 பேர் பலி

ராய்ப்பூர், ஜன. 24

லாரி ஒன்று கவிழ்ந்து. தொழிலாளர்கள் மீது விழுந்ததில் ஏழுபேர் நசுங்கி மாண்டனர். இச் சம்பவம், பிலாய் உருக்கு ஆலை அருகே நந்தினி என்னும் இடத்தில் சுண்ணம்புக்கல சுரங்கத்தில் நிகழ்ந்தது.

லாரியை பின்பக்கமாக ஓட்டியபோது இவ் விபத்து ஏற்பட்டது.

## இந்திய விமானியின் புதிய சாதனை

பம்பாய், ஜன 26

கலிபோர்னியாவில் அண்மையில், பாம்டேல் எனுமிடத்தில் ஓர் இந்திய விமானியான காப்டன் டிக்கான் என்பவர் ஒலியயைவிட இரண்டு மடங்கு வேகத்தில் விமானமொன்றைச் செலுத்தினுர்.

ஹாங்காங்கில், ஏர் இந்திய பிரதம விமானியாகப் பணியாற்றும இவர், ஒலியை விட அதிக வேகத்தில் விமானத்தைச் செலுத்திய முதல் இந்திய விமானி என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "'சுடு' என்றதும் சுட்டார்: நவநீதன் விழ்ந்தார்"

## கட்டுவன் மேறது கொலை வழக்கில் சாட்சியம்

மாவிட்டபுரம், ஞாயிறு

கட்டுவன் மேற்கைச்சேர்ந்த நன்னியன் நவநீதன் என்பவரை சென்ற மார்கழி மாதம் 20-ம் திகதி சுட்டுக்கொலை செய்ததாக அசேலூரைச் சேர்ந்தவர்களான வேலுப்பிள்ளை தம்பிராசா, வல்லிபுரம் வேலாயுதம், யோகரத்தினம் என்று அழைக்கப்படும் இராமு யோகராசா ஆகிய மூவர் மீதும் சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு எஸ். வி. மூர்த்தியினால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ். எச். அத்துலுபானா முன்னிலையில் தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது காங்கேசன்துறை உதவி மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் வி. சண்முகநாதனை எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் திரு. கே. வி. சண்முகநாதன் குறுக்கு விசாரணை செய்தார்.

அடுத்ததாக பொலிசாருக்கு முதல் தகவல் கொடுத்தவரும் சம்பவத்தை நேரில் கண்டவருமான கந்தன் இராசா பொலிஸ் தரப்புச் சாட்சியாக அழைக்கப்பட்டார். அவர் தமது சாட்சியத்தில் கூறியதாவது: நான் சம்பவதினம் இரவு 10 மணியளவில் வீட்டிலிருந்தேன. அச்சமயம் எனது வீட்டிலிருந்து சுமார் 100 யார் தூரத்திலுள்ள காலஞ்சென்ற நவநீதன் வீட்டுப்பக்கமாக ஒரு பெண்ணின் கூக்குரல்கேட்டது நான் உடனே அவ்விடத்தைநோக்கி ஓடினேன் அப்போது தம்பிராசா, வேலாயுதம், யோகரத்தினம் ஆகிய மூவரும் நவநீதனைத் துரத்திக்கொண்டு வருவதைக் கண்டேன். அப்போது தம்பிராசாவும், யோகரத்தினமும் வேலாயுதத்திடம் "சுடு" என்னுர்கள். வேலாயுதத்தின் கையில் துப்பாக்கியிருந்தது அவர்கள் 'சுடு' என்றதும் வேலாயுதம் உடனே சுட்டார் உடனே நவநீதன் விழுந்துவிட்டார். எனக்கு வேலாயுதம் சுட்டதும் நவநீதன் விழுந்ததும்தான் தெரியும். வேலாயுதம் நவநீதனுக்குப் பின்னாலிருந்து சுட்டார். நவநீதனை எதிரிகள் மூவரும் துரத்திக்கொண்டு செல்லுகையில் நவநீதன் பின்னுக்குத்திரும்பித் திரும்பிப்பார்த்துக்கொண்டு ஓடினார். நவநீதன் விழுந்ததும் நான் உடனே அண்ணர் செல்லப்பாவிடம் ஓடினேன். அவரிடம் வேலாயுதம் நவநீதனைச் சுட்டுப்போட்டு ஓடுவதாகக் கூறினேன். நாங்கள் இருவரும் சம்பவ இடத்துக்குத் திரும்பி வந்தபோது காலஞ்சென்றவருக்குப் பக்கத்தில் அவரின் மனைவி கண்மணி இருந்தார் அப்போது நவநீதன் உடலில் உயிர் இல்லை. அவர் உடம்பில் காயங்களிருந்தன. நான் வசாவிளானுக்குப்போய் தம்பிஐயா என்பவரைக் கூட்டிக்கொண்டு சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்குச்சென்றேன். நான் பொலிஸ் நிலையத்துக்குச் செல்லுமுன்னர் சம்பவம் நடந்த இடத்துக்கு விசாவிளானிலிருந்து திரும்பிவந்து பார்த்த பின்னர் தான் பொலிஸ் நிலையம் சென்றேன். நான் மரண விசாரணையில் காலஞ்சென்றவரை அடையாளம் காட்டினேன்.

சாட்சியை எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சி கூறியதாவது: "சம்பவதினம் முன்னிரவு நேரத்தில் இலேசாக மழை தூறியது. சம்பவம் நடந்த சமயம் ஒருவரிடமும் 'லைட்' இருக்கவில்லை. ஆனால் நிலவு வெளிச்சமிருந்தது. சம்பவ இடத்திலிருந்து 100 யார் தூரத்தில் கிராம சேவகரின் வீடு இருக்கிறது. ஆனால் ஒருவரும் இச்சம்பவத்தைப்பற்றி அவரிடம் அறிவிக்கவில்லை. அதைப்பற்றி யோசிக்கவும் இல்லை. நான் செல்லப்பாவிடம் சம்பவ இடத்துக்கு வந்தபோது கண்மணி நவநீதத்துக்கு பக்கத்தில் குளறிக்கொண்டிருந்தார். நான் கண்மணியை அதற்கு முன்னரோ சம்பவத்தின்போதோ காணவில்லை. நான் அவரைக் கண்டபோது அவர் என்னிடம் வேலாயுதம், தம்பிராசா, யோகரத்தினம் ஆகிய மூவரும் வந்ததாகவும் வேலாயுதத்திடம் மற்ற இருவரும் "சுடு" என்றதும் வேலாயுதம் சுட்டுபோட்டு ஓடியதாகவும் கூறினார். நானும் அவரிடம் கண்டதைக் கூறினேன். நான் முதலில் வசாவிளானில் உள்ள எனது ஒன்றுவிட்ட சகோதரரான தம்பிஐயாவிடம் போவதெனத்தீர்மானித்தேன். நான் அவரிடம் நடந்துபோய் அவரைக் கூட்டிக்கொண்டு சம்பவ இடத்துக்கு வந்து பின்னர், பொலிஸ் நிலையம் சென்றேன். நான் தம்பிஐயாவிடம் செல்லும் போது மற்றவர்களை பொலிஸ் நிலையத்துக்கோ கிராமசேவகரிடமோ செல்லும்படி கூறவில்லை. தம்பிஐயா காலஞ்சென்றவரின் நெருங்கிய உறவினராக இல்லாதபோதும் நான் அவருக்கு அறிவிக்கச் சென்றேன். ஆனால் சம்பவ இடத்துக்கு மிக அருகிலிருந்த காலஞ்சென்றவரின் உறவினருக்கோ கிராமசேவகருக்கோ அறிவிக்கச்சொல்லவில்லை. காலஞ்சென்றவரின் வீட்டுக்குப் பக்கத்தில் அவரின் மாமி வள்ளியின் வீடு இருக்கிறது. நான் வீட்டிலிருந்தபோது கேட்ட கூக்குரல் வள்ளியினுடையதல்ல. அது கண்மணியினுடையது. அக் கூக்குரல் மூன்றோ நான்கு தடவை கேட்டது நவநீதன் தெற்கிலிருந்து வடக்குப்பக்கமாக ஓடினார். எதிரிகள் பின்னால் அதே திசையில் துரத்தினார்கள். தம்பிராசா துவக்கை வட மேற்குப் பக்கமாக நீட்டி வைத்திருந்தார். வெடிச் சத்தம் கேட்டது. நான் மூன்று வெடிச்சத்தத்தைக் கேட்டேன். ஒரு வெடி நவநீதனைக் குறிவைத்துச் சுட்டார். பிறகு 2 தடவை சுட்டார். அந்த இரு சூடும் யாரை நோக்கிச் சுடப்பட்டதென்று தெரியாது. அந்த இரு சூடும் சுட்டதைக் காணவில்லை. முதற் சூடு சுட்டதும் நான் செல்லப்பாவிடம் திரும்பி போனேன்

இக் கட்டத்தில் நீதிபதி மேல் விசாரணையை அடுத்த மாதம் 5-ம் திகதிக்கு ஒத்தி வைத்தார். எதிரிகள் தரப்பில் திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் திரு கே. வி. எஸ். சண்முகநாதன் ஆஜரானார். பொலிஸ் சார்ஜன்ட திரு. சின்னையாவின் உதவியுடன் வழக்கறிஞர் எஸ். நடராசா வழக்கை நடத்தினார்.



குதூகல வாழ்வுக்கு மார்க்கம் நல்ல ஆரோக்கியமே!

இதை அளிக்கிறது

நேத்திராலோகதைலம்

இது பீனிசம், தடிமன், நரம்புவலி போன்றவியாதிகளிலிருந்தும் தலையிலும் கண்களிலும் ஏற்படும் எல்லாவித வருத்தங்களிலிருந்தும் உங்களை பாதுகாக்கிறது.

நேத்திராலோகத் தைலம் கண்களுக்கு இதமளித்து தலைக்கு குளிர்மையளித்து பொடுகு, இளநரை ஆகியவை ஏற்படாமல் தடுத்து கூந்தலை ஆரோக்கியமுடன் நீண்டு வளரச் செய்கிறது.

தினசரி நேத்திராலோக தைலத்தை பாவியுங்கள்.

½ போத்தல் ரூ. 3/- தபால் செலவு சதம் /-85.

வி. பி. பி. ஒடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இலவச ஆலோசனைகளுக்கு தினசரி காலை 8-30 மணியிலிருந்து மாலை 4-30 மணிவரை டாக்டர் ஒருவர் இருப்பார்.



★

டப்ளியூ. கே. ஜினதாஸ,

ஆயுர்வேத வைத்தியர்,

161, நோரிஸ் ரோடு,

கொழும்பு-11.

## "ஜனநாயகத்தை பாதுகாக்க வேண்டும்"

நுவரேலியா, ஞாயிறு

இன்று எங்களை எதிர்நோக்கியிருக்கும் பிரச்னை என்னவெனில் நாங்கள் எங்கள் ஜனநாயக அடிப்படையிலுள்ள சுதந்திரத்தை பாதுகாத்துக் கொள்வதா அல்லது சர்வாதிகார ஆட்சியின் கீழ் அடிமைகளாக வாழ்வதா என்பதேயாகும். சுதந்திரத்தைப் பற்றி சிந்திக்கும் ஒவ்வொரு பிரஜையும் வருங்காலத்தில் ஜனநாயகம் இந்த நாட்டில் நீடிக்கும்படி வேண்டியன செய்ய வேண்டும்" என்று நுவரேலியா தொகுதிக்கு ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடும் திரு. டொனல்ட ஜே. ரணவீர நுவரேலியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது குறிப்பிட்டார்.

## சிரமதானம்

யாழ்ப்பாணம், திங்கள்

சண்டிருப்பாய் இந்துக் கல்லூரிக்கு முன்னால் ஆரம்பமாகி தேனீர்ப்புளியடிக் கிராமத்தினூடாகச் செல்லும் ஒழுங்கையை விஸ்தரித்துத் திருத்தும் வேலையைத் தேனீர்ப்புளியடி இளைஞர்களும் மற்றும் அவ்வூர்ப் பிரமுகர்களும் சிரமதான இயக்கமூலம் செய்துவருகின்றனர். முக்கியமாக ஒழுங்கையின் இரு மருங்கிலும் உள்ளோர் தங்கள் தங்கள் வளவுகளில் குறிப்பிட்டளவு ஒழுங்கை விஸ்தரிப்புக்காக வழங்கியுள்ளனர்.

## வரட்சியின் கொடுமை

புத்தளம், ஞாயிறு

பத்தாயிரம் ஏக்கர் நெற்காணிகள் இங்கே வரட்சிகாரணமாக பாதிக்கப்பட்டுள்ளன. அநேகமாக எல்லா வயல்களும் வரண்ட பாலைவனம்போலக் காட்சியளிக்கின்றன.

## பிரிவுபசாரம்

சுழிபுரம், ஞாயிறு

வலிகாமம் மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சமாசத்தில் விகிதராகக் கடமையாற்றி கூட்டுறவுப் பரிசோதகராகத் தெரிவுசெய்யப்பட்ட திரு மா. தில்லைநாயகத்துக்கு ஒருபிரியாவிடைக்கூட்டம் சமாசமண்டபத்தில் நடைபெற்றது.

திருமலையில்

## 18,153 வீடுகள் சேதம்

திருக்கோணமலை, ஞாயிறு

புயல் வீசி ஒரு மாதமாகியும் புயலினால் ஏற்பட்ட சேதம் இன்னும் அதிமாகவே இங்கு காணப்படுகிறது. திருக்கோணமலையில் 18,153 வீடுகளும், கிண்ணியாவில் 4422வீடுகளும், மூதூரில் 2381 வீடுகளும் புயலினால் பாதிக்கப்பட்டுள்ளன இந்தப் புயலினால் காய்கறிகள் விலை குறைந்திருக்கின்றன. தோடம்பழங்கள் சந்தைகளில் இங்கே ஏராளமாகக் குவிந்துள்ளன.

## சர்ச்சில்

லண்டன், ஜன. 24

சர் வின்ஸ்டன் சர்ச்சிலின் உடல் நிலையில் எந்தவித மாறுதல்களும் ஏற்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

லண்டன் நேரப்படி இன்று காலையில் வெளியிடப்பட்ட வைத்திய அறிக்கையில், சர்ச்சிலின் நிலைமை மோசமாக இருப்பதாகவும் அவரின் தேக நிலையில் நல்ல அறிகுறிகள் காணப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈரான் பிரதமர்

டெஹ்ரான், ஜன. 24

கடந்த வியாழக்கிழமை துப்பாக்கிசூட்டுக்குள்ளான ஈரான் பிரதமர் நேற்று சுயநினைவு பெற்ருர். இருந்தபொழுதிலும் அவருக்கு போதிய சுகம் ஏற்படவில்லையென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஒருவர் பலி

மக்கோனை, ஞாயிறு

பதினறு தொழிலாளர்கள் மணல் திடல் ஒன்றை மகாகொட என்ற இடத்தில் வெட்டிக்கொண்டு நிற்கும் பொழுது, திடல் சரிந்ததன் காரணமாக ஒருவர் கொல்லப்பட்டும், இருவர் கடும்காயத்திற்கு முள்ளானார்கள்.

மனோகரா (யாழ்ப்பாணம்) போன்; 485

மாலா சின்ஹா மனோஜ் குமார் நடித்த

சுஹாக் சிந்தூர் (ஹிந்தி)

REGAL — JAFFNA

NOW SHOWING

Gordon Scott in MACISTE AGAINST the VAMPIRES (Totalscope-Color)

ராஜா சினிமா (சுழிபுரம்)

எம். ஜி. ராமச்சந்திரன் சரோஜாதேவி நடித்த

திருடாதே

5-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

விஜயா (மட்டக்களப்பு) மோடேர்ன் (பதுளை)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்: மாலை 2-30, இரவு 6-30, 9-30

சனி, ஞாயிறு 4 காட்சிகள்:

காலை 10-30, மாலை 2-30, இரவு 6-30, 9-30



சிவாஜி கணேசன் - சாவித்திரி மற்றும் பலர் நடித்த

கர்ணன்

(ஈஸ்மென்கலர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச்சுருக்கம்

மீரிகம வில்வத்தையில் கடந்த வருடம் அக்டோபர் மாதம் 17-ந் திகதி நடைபெற்ற புகையிரத விபத்தில் காயமுற்றோருக்கும் இறந்தவர்களின் உறவினர்களுக்கும் அடுத்த மாதம் நஷ்டஈடு வழங்கப்பட வருகிறது. இவ்விபத்தில் 28 பேர் மாண்டனர். 130 பேர் காயமடைந்தனர்.

ஃ ஃ ஃ

"தோட்டத்தொழிலாளர்கள் உட்பட இந்நாட்டில் உள்ள தொழிலாளர் வர்க்கத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சிறந்த சேவை செய்துள்ளது இதைத் தொழிலாளர் வர்க்கம் மறந்துவிடக்கூடாது" என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவில் நிவித்திகலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் காணிஅமைச்சர் திரு வி. டி. ஜி. கருணாரத்தின கூறினார்.

ஃ ஃ ஃ

"கொழும்பு பொது நூல் நிலையத்தைப் பற்றிப் பரிசீலனை செய்த கந்தையா கமிட்டியின் அறிக்கை மிகவும் முக்கியமானது. அவ்வறிக்கையில் செய்யப்பட்டுள்ள சிபார்சுகள் அமுலாக்கப்படின் பொது நூல் நிலையத்திலுள்ள பல குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முடியும். ஆனால் அக்கமிட்டியின் சிபார்சுகள் எவையேனும் அமுலாக்கப்படாததையிட்டு எமது கமிட்டி ஆச்சரியமடைந்துள்ளது" என்று பொது நூல்நிலையத்தின் விசேஷ கமிட்டித் தலைவர் திரு. ஆர். பிரேமதாசா கூறினார்.

ஃ ஃ ஃ

இராணுவப்பிரிவுகளின் தலைவர்கள் உட்பட சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுக்கு பாகிஸ்தானில் இராணுவ தந்திரோபாயங்களில் பயிற்சியளிக்கப்படவிருக்கிறது.

ஃ ஃ ஃ

மன்னார்ப்பகுதியில் பாதிக்கப்பட்டுள்ள இந்திய வம்சாவளியினருக்கு மறுக்கப்பட்டிருந்த கஷ்ட நிவாரண உதவியை மீண்டும் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக சமூகசேவை இலாகா அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஃ ஃ ஃ

உத்தியோகமொழியைப் பொறுத்தவரையில் அரசாங்க ஊழியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகள் புதிதாக அரசாங்கத்தில் சேர்ந்த ஆசிரியர்களுக்கு அளிக்கப்படவேண்டும் என்று உத்தியோக மொழி சம்பந்தமான மந்திரிசபை உப கமிட்டிக்கு அனுப்பியுள்ள மகஜரில் அகில இலங்கை அரசினர் ஆங்கில உதவி ஆசிரியர் தொழிற்சங்கத்தின் தலைவர் திரு. எம். ஏ. ஸ்டான்லி பெரேரா கேட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

இம்மாதம் 30-ந் திகதி நடைபெறவிருந்த எழுதுவினைஞர் சேவை இரண்டாம தரத்தற்கான தேர்வுப் பரீட்சை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளபோதிலும் பழைய ஊழியர்களென்ற தமிழ் ஊழியர்கள் இப்பரீட்சைக்கு அனுப்பிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று பரீட்சைக் கமிஷனர் இவர்களுக்கு அறிவித்துள்ளார்.

## மத்திய கழகம் வெற்றி

சாவகச்சேரி, வெள்ளி

காங்கேசன்துறை, படகுத்துறை விளையாட்டுக்கழகத்திற்கும் சாவகச்சேரி மத்திய விளையாட்டுக்கழகத்திற்கும் இடையே இங்கு நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் மத்திய கழகம் 2-0 கோல்களால் வெற்றிபெற்றது.

ஆசிரியருக்குக் கடிதம்

# நட்சத்திரமா?

சென்ற ஞாயிறு 'ஈழநாட்'டில், 'வானத்தில் நகர்ந்த ஒளி நட்சத்திரமா — ராக்கெட்டா?' என்ற தலைப்பின் கீழ் வெளியாகிய செய்தியைக் கண்ணுற்றேன். அந்த நகரும் ஒளி ஒரு நாள் மட்டும் வானத்தில் தோன்றியதல்ல! கடந்த ஒன்றரை இரண்டு மாதமாகப் பெரும்பாலும் தினமும் அந்த ஒளி நகர்ந்து செல்வதை யான் மட்டுமல்ல கோப்பாயிலுள்ள மக்கள் பலர் அவதானித்து வருகின்றனர். தினமும் மேற்படி ஒளியைக் காணத் தவறினும் கிழமைக்கு மூன்று அல்லது நான்கு நாட்களாவது காணமுடிகின்றது. ஆரம்பத்தில் அந்த ஒளி வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நகர்ந்துவந்தது ஆனால் இப்போது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி நகர்வதை அவதானிக்க முடிகிறது. பல நாட்களாக மாலை 6-45-க்கும் சில நாட்களில் 7-20, 8-15-க்கும் காணமுடிந்தது இரண்டுநாட்கள் அதிகாலை 4-25-க்கு காணமுடிந்தது.

வி. சண்முகராஜா
கோப்பாய்.

## வெளிநாட்டு மந்திரி மைக்கேல் ஸ்ருவர்ட்

லண்டன், ஜன 23

பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரியாக முன்னாள் கல்வி மந்திரி திரு மைக்கேல் ஸ்ருவர்ட் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. கோல்டன் வாக்கர் ராஜினாமா செய்து கொண்டதைத்தொடர்ந்து திரு மைக்கேல் அவரின் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

## கிணற்றில் விழுந்து மரணம்

சழிபுரம், ஞாயிறு

பொன்னாலை — செல்லியான் கூட்டுறவுச் சங்கக்கடை மனேஜர் இராசா சரவணமுத்து (40) தமது வீட்டுக்கு அருகாமையிலுள்ள வயல் கிணற்றில் தவறுதலாக விழுந்து மரணமானார். அதிகாலை 6 மணி அளவில் வீட்டுக்கு அருகில் உள்ள வயலிலுள்ள கிணற்றில் நீர் எடுத்தபோதுதான் மேற்படி சம்பவம் நடைபெற்றதாக மரணவிசாரணையின் போது தெரியவந்தது. வலி. மேற்கு மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். ரி. நடராசா மரணவிசாரணை நடத்தினார். காலஞ்சென்ற சரவணமுத்து தொல்புரம் பலநோக்கு சங்கத்தின் கிளையான பொன்னாலை-செல்லியான் சங்கக் கடையில் கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக கடமையாற்றி வருவதாகவும், இரண்டு குழந்தைகள் மனைவி இருப்பதாகவும் சாட்சிகள் தெரிவிக்கப்பட்டன காலஞ்சென்றவரின் மனைவி மதவர் இராசா ஆகியோர் சாட்சியமளித்தனர். தவறுதலாக கிணற்றில் விழுந்ததால் மரணம் ஏற்பட்டதென மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

## தகராறைத் தீர்க்க தூதுகோஷ்டி வருகை

கொழும்பு, ஞாயிறு

ஐக்கிய நாடுகள் சங்கங்களின இலங்கை கிளையான உலக சமமேளனத்தில் ஏற்பட்ட சில உட்பகை காரணமாக எழுந்த சிக்கல்களை தீர்த்துவைக்கும்பொருட்டு உலக சமமேளனத்திலிருந்து ஒரு தூதுகோஷ்டியினர் இலங்கை வந்தடைவர் எனத் தெரிய வருகின்றது. 1964-ம் ஆண்டு நடைபெற்ற ஆண்டுக் கூட்டத்தில் இருந்து, இந்த இரு பகுதியினரும் தாங்கள் தான் இலங்கையின் கிளை என்ற அடிப்படையில் சிக்கலைக் கவனித்துக்கொண்டு வருகின்றனர்.

# அமெரிக்க தூதர் இன்று யாழ்ப்பாணம் வருவார்

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கையின் அமெரிக்க ஸ்தானிகரான திரு. சிசில் லியோன் இன்று யாழ்ப்பாணம் வந்து சேருவார், அவர் இங்கு மூன்று தினங்கள் தங்கியிருப்பார்.

திரு, சிசில்லியோனை கௌரவிக்குமுகமாக அவருக்குயாழ்ப்பாணம் மாநகரசபை நாளை மாலை நகரமண்டபத்திலுள்ள செயற்குழு அறையில் ஒரு தேநீர் விருந்து அளிக்கும்.

## காட்டில் கிடந்த பிரேதம்

கொழும்பு, ஞாயிறு

மல்வானை என்னுமிடத்தைச் சேர்ந்த ஜி. மொகமட் என்பவர் தலையில் காயங்களுடன் காட்டில் இறந்துகிடக்கக் காணப்பட்டார். இதுசம்பந்தமாக இருவர் கைது செய்யப்பட்டனர்.

## மரத்தால் விழுந்தவனை...

கொழும்பு, ஞாயிறு

அனுராதபுரம் கணேமுலஹெர இடத்தைச் சேர்ந்த ஆறு வயது சிறுவன் கே. ஜி சிறில் என்பவன் சைக்கிளிலிருந்து தவறி விழுந்தபொழுது எதிர்பாராதவிதமாக ஒரு மாட்டுவண்டிச் சில்லுக்குள் அகப்பட்டு மரணமானான், மட்டுவண்டி பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

## கார் மோதி மரணம்

கொழும்பு, ஞாயிறு

ரத்கம என்ற இடத்தில் நேற்று முன்தினம் 70 வயதுள்ள கே. எஸ். ஒஹிபஹாமி என்பவர் காரினால் மோதுண்டு ஸ்தலத்திலேயே மரணமானார். கார் சாரதி பி. எச். கே பாறன், பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

## கூ. மொவி.க்கு இரண்டு கார்கள்

கொழும்பு, ஞாயிறு

கூ. மொ. வி. ஸ்தாபனத்தின் உபயோகத்திற்காக இரண்டு கார்கள் நேற்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தன. இந்தக் கார்கள் ஜப்பானில் தயாரிக்கும் பிரபல்யமான ஒரு வகையைச் சேர்ந்தது. கப்பலில் நின்றும் கார்கள் இறக்கப்பட்டதும் கூ. மொ. வி. ஸ்தாபனத்தினர் உடனடியாக கார்களை பொறுப்பேற்றனர்.

## இந்துவாலிபர் சங்க தொண்டர்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மேலைக் கரம்பன் முருகமூர்த்தி மகா கும்பாபிஷேகத்தின்போது கொழும்பு இந்து வாலிப சங்கத்தின் தொண்டர்கள் பலர் சங்க உப தலைவர் திரு. எஸ் புண்ணியமூர்த்தியின் தலைமையில் கொழும்பிலிருந்து வந்து இங்கே கும்பாபிஷேகத்தின் போது பலவகையான தொண்டில் ஈடுபட்டிருந்தனர். விசேஷமாக இந்த வைபவத்தில் கலந்துகொண்ட தொண்டர்கள் இன்று கொழும்பு திரும்புவார்கள்.

## மொரேஷியஸ் பிரதமர்

புதுடில்லி, ஜன, 24

கல்கத்தா சென்றிருந்த மொரேஷியஸ் பிரதமர் டாக்டர் ராம்குலாம் இன்றுகாலை வந்து சேர்ந்தார்.

குடியரசு தினத்தில் தாம் புதுடில்லியில் தங்கியிருப்பது [illegible] அவர் நிருபர்களிடம் தெரிவித்தார்.

## மனேஜர் தேவை

புங்குடுதீவு மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு பின்வரும் நிபந்தனைகளுக்கமைவான மனேஜர் ஒருவர் வேண்டியிருக்கின்றது. குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கமைவானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன.

விண்ணப்பம் ஏற்கும் கடைசித் திகதி: 10-2-65.

தகுதி: கூட்டுறவுக் கலாசாலையில் பூரண பயிற்சிபெற்றிருத்தல் வேண்டும்.

நிபந்தனை: (1) ரொக்கப் பிணை: 1000 ரூபாய். (2) ஆதனப்பிணை: 3000 ரூபாய்.

சம்பளம்: மாதம் ஒன்றிற்கு மொத்தமாக ரூபாய் எண்பது மட்டும் (80 ரூபாய்) வருடாந்த சம்பள உயர்ச்சி ரூபா ஐந்து.

விண்ணப்பங்கள் யாவும், 3 மாதங்கட்குட்பட்டதாக வழங்கப்பட்ட 2 நற்சாட்சிப்பத்திரங்களுடன் சேர்த்து, காரியதரிசி, புங்குடுதீவு மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், புங்குடுதீவு என்ற விலாசத்துக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்.

கா. நடராஜா,
காரியதரிசி,
புங்குடுதீவு மேற்கு
பலநோக்குக்கூட்டுறவுச்சங்கம்
28-1-65. 1271

## தேவை

வலிகாமம் மேற்கு ப. நோ கூ. ச சமாசத்திற்கு ஓர் லிகிதர் தேவை.

**தகுதி:**

பொதுத்தராதரப் பரீட்சையில் சிரேஷ்ட தராதரத்திற்குரிய பூரண சித்தி பெற்றிருத்தல்வேண்டும். தமிழ் மூலமாயின் ஆங்கிலப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**வயது:**

20இன் மேல் 30திற்குள்.

கூட்டுறவுக் கலாசாலைப் பயிற்சி, தமிழிலும், ஆங்கிலத்திலும் தட்டெழுத்து அனுபவம், கணக்குப் பதிவியல் அனுபவம் உடையோர் விரும்பத்தக்கது.

**வேதனம்:**

75 — 125.
5 — 10.

(பிற சலுகைகள் சமாசநடைமுறையில் உள்ளபடி)

விண்ணப்பம் 6-2-65க்கு முன்பு சமாசத் தலைவருக்குப் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படவேண்டும்.

1269

## WANTED A CLERK CUM STOREKEEPER

Qualification: S. S. C. with English and Tamil as subjects or G. C. E (ord) Level in six subjects including Arithmetic or Mathematics, Tamil and English (credit) or Higher Educational Qualification.

Preference: Will be given to those (1) Knowledge and Experience in Typing, Book-keeping. (2) Certificate of Training from the Co-op Training School.

Age 20 to 35.

Salary: Rs. 200/- all inclusive.

Security: Cash Rs 1500/- and property worth Rs. 5000/-

Closing date of application 6-2-65.

All applications should be sent to the President Vali West M. P C S Union under registered cover with the name of the post marked on the upper left hand corner of the envelope.

President,
Vali West M P C S Union.
Chankanai
1268

# வரி விளம்பரம்

## தேவை

எமது கிளை ஸ்தாபனத்தை நிர்வகிக்கக்கூடிய திறமைசாலி, பிணைப்பணம் ரூ 1000/- கட்டக்கூடியவரும் சைக்கிள் சேல்ஸ்மனும் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். யாழ்ப்பாண எரோஸ் & இன்டஸ்றீஸ். 72/1 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1483

## விற்பனைக்கு

E L 5953ம் இலக்கமுள்ள மொறிஸ் மைனர் (Morris Minor) வான் விற்பனைக்கு உண்டு. விபரங்கள் வலிகாமம் மேற்கு ஐக்கிய பால்பண்ணைச் சங்கம், வழுக்கம்பரை, சுழிபுரம் என்ற முகவரியில் அறிந்து கொள்ளலாம். 1485

## இ. போ. ச. பஸ் டிக்கட் புத்தகம்

யாழ்ப்பாணத்திலிருந்து புங்குடுதீவுக்கு சனிக்கிழமை பகல் ஒருமணிக்கு சென்ற பஸ்ஸில் ஒரு உமல்பை காணாமற்போய் விட்டது. இந்தப் பையுக்குள் ஒரு கோட், பெட்ஷீட், பஸ் பிரயாண டிக்கட் புத்தகம், சாமான் டிக்கட் புத்தகம் ஆகியவை இருந்தன. டிக்கட் புத்தகங்களைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து என்னிடம் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்குவேன். மு. இராசரத்தினம், ஆலும் வட்டாரம், வேலணை மேற்கு, மேற்கு, வேலணை 1486

## திருமண அழைப்பு

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 1996 தைத்திங்கள் 16-ம் நாள் (29-1-65) இரவு 1 மணி 26 நிமிடம் தொடக்கம் 1 மணி 48 நிமிடம் வரை உள்ள சுபவேளையில் காலஞ்சென்ற திரு. ச. சோமசுந்தரம் அவர்களினதும் திருமதி அ. சோமசுந்தரம் அவர்களினதும் சிரேஷ்ட புதல்வனும், சேர். சிவபாலனின் தமையனுமாகிய திருநிறை செல்வன் சோ. கங்காதரன் (நில அளவைப் பகுதி) அவர்களுக்கும் காலஞ்சென்ற திரு ச. கந்தையா அவர்களின் கனிஷ்ட புதல்வி திருவளர் செல்வி வி. க. பராசக்தி அவர்களுக்கும் திருமங்கள நாண்பூட்ட திருவருள் பாலித்திருக்கிறது. அத்தருணம் சுற்றத்தவர்களையும் நண்பர்களையும் சமூகம் தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் வேண்டுகின்றோம். கொண்டாட்டம் 30-1-65 சனிக்கிழமை பி. ப. 5 மணிக்கு மணமகன் இல்லத்தில்.

திருமதி அ. சோமசுந்தரம் (மணமகனின் தாயார்), 81 ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்.

திரு. க. நடராஜா, (Majis trate courts Jaffna) கொக்குவில்-கிழக்கு, கொக்குவில். 1482

## பத்து லட்சம் திகதி அட்டவணைகள் இலவசமாக விநியோகிக்கப்படும்

கொழும்பு, ஞாயிறு

இலவச விநியோகத்துக்காக 10,00,000 பிரதிகள்தேதி அட்டவணைகள் அச்சடிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இத்திகதி அட்டவணைகள், அரசாங்க அச்சகத்தில் பிரசுரிக்கப்பட்டு தகவல்பகுதிமூலம் விநியோகிக்கப்படும். அட்டவணைகளின் முகப்புப் படமாக பிரதமர் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்காவின் உருவப் படம் மட்டும் அமைந்திருக்கும்.

பத்துலட்சம் திகதி அட்டவணைகளையும் பிரசுரித்து விநியோகிப்பதற்கு அரசாங்கத்துக்கு 1,00,000 ரூபா செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வானொலியில் பாதுகாப்பு நடவடிக்கை

## அடையாள அட்டைகளுடன் வரும்படி ஊழியருக்கு உத்தரவு

கொழும்பு, ஞாயிறு

நாளை திங்கட்கிழமை தொடக்கம் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் இலங்கை வானொலி நிலையத்தில் நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. வானொலி நிலையத்தில் வேலைசெய்யும் உத்தியோகத்தர்கள் எப்போதும் நாளையிலிருந்து அடையாள அட்டைகளைக் கொண்டு வரும்படி கோரப்பட்டிருக்கின்றனர்.

வானொலி நிலையத்தில் வேலை செய்வோரை சந்திக்க விரும்புவோர் நிலையத்திற்கு உள்ளே சென்று அவர்களை சந்திக்க அனுமதிவழங்கப்படமாட்டாது.

வானொலி நிலையத்தில் வேலை செய்பவர்கள் இந்த அடையாள அட்டைகளை தங்களுடன் வைத்திருக்கவேண்டும் என்று ஒரு விதி இருந்தபோதிலும் அது நடைமுறையில் நிறைவேற்றப்படவில்லை என்று ஒரு அதிகாரி தெரிவித்துள்ளார்.

தேவையற்றவர்களின் நடமாட்டத்தைத் தடுப்பதற்காகவே இந்த முறை கையாளப்பட்டுள்ளதென்றும் தெரியவருகின்றது.

# தமிழ் அறிவிப்பாளர் மீது குற்றச்சாட்டு தாக்கல்

கொழும்பு, ஞாயிறு

வானொலி தமிழ் பகுதியில் கடமையாற்றும் ஒரு அறிவிப்பாளர் மீது சில குற்றச்சாட்டுகள் பற்றி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

தொழிற் சங்க மூலமாக அவர் அனுப்பியுள்ள கடிதமொன்றில், தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்துள்ளார்.

இது சம்பந்தமாக ஒரு விசாரணை நடத்துமாறும் சங்கம் வானொலி அதிகாரியை கேட்டுள்ளது.

## பீகிங்கில் சுபந்திரியோ

பீகிங், ஜன. 24

இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி டாக்டர் சுபந்திரியோ 42 பேரடங்கிய தூதுகோஷ்டி ஒன்றுடன் பீகிங் வந்துசேர்ந்தார். பிரதமர் சூஎன்-லாய் உட்படப் பலர் அவரை வரவேற்றனர். சீனாவிலிருந்து ராணுவ, பொருளாதார உதவி பெறுவது பற்றிப் பேசப்போவதாய் அவர் கூறினார். சீனாவில் அவர் 4 நாள் தங்குவார்.

★ நாதஸ்வரக் கச்சேரி

★ வில்லுப் பாட்டு

★ நவீன கதாப்பிரசங்கம்

★ பரதநாட்டியம்

★ சரித்திர நாடகம்

★ சமூக நாடகம்

மற்றும் பல கலை நிகழ்ச்சிகளும்

'ஈழநாடு'

சூறாவளி கஷ்ட நிவாரண நிதிக்காக

'ஈழநாடு' ஊழியர் அளிக்கும்

கதம்ப நிகழ்ச்சி

ஈழத்தின் தலைசிறந்த கலைஞர்கள் அளிக்கின்றனர்

தினம்: 31 - 1 - 65 ஞாயிற்றுக்கிழமை

நேரம்: மாலை 5-00 மணி

இடம்: வைத்தீஸ்வர வித்தியாலய திறந்த வெளியரங்கு

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## பசுபிக்கில் பூகம்பம்

டோக்கியோ, ஜன. 24

பசுபிக்கின் ஒரு பகுதியில் கடுமையான பூகம்பம் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் எந்தப் பகுதியில் அது நிகழ்ந்திருக்கிறது என்பது உடனடியாகக் கண்டுபிடிக்கப்படவில்லை.

பசுபிக்கில் ஏற்பட்ட பூகம்ப அதிர்ச்சிகளை ஜப்பானிலுள்ள பூகம்ப அதிர்ச்சி பதிவு நிலையங்கள் பதிந்துள்ளன. மற்றுமொரு நாட்டிலும் இந்த அதிர்ச்சி பதியப்பட்டிருக்கிறது.

## டொரிக் சூசா கொழும்பு திரும்பினர்

குரும்பசிட்டி, ஞாயிறு

வடபகுதியில் இலங்கை சமசமாஜக் கட்சியின் சார்பில் பொதுத் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களின் தேர்தல் வேலைகளைக் கவனிக்கும் பொருட்டு செனட்டர் திரு. டொரிக் சூசா இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வந்தார். யாழ். மாவட்ட சமசமாஜக் கட்சியின் பிரதிநிதிகளடங்கிய கூட்டமொன்றில் பங்குபற்றிவிட்டு இன்றிரவே அவர் கொழும்பு திரும்பினர்.

## சர்ச்சில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டன் ஜோன்ஸன், பிரெஞ்சு அதிபர் டிகோல், பிரிட்டிஷ் பிரதமர் திரு ஹரோல்ட் வில்ஸன் உட்பட பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத், இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. லால்பகதூர்சாஸ்திரி ஆகியோர் சர்ச்சிலின் தேகநிலைமை குறித்து அடிக்கடி கவலை செலுத்திக்கொண்டிருந்தனர்.

லண்டனிலுள்ள சிறந்த ஒரு தேவாலயத்தில் அண்மையில் எலிஸபெத் ராணியின் தலைமையில் ஒரு விசேஷ பிரார்த்தனையும் நடைபெற்றது. மக்கள் தங்கள் வீடுகளிலும் தேவாலயங்களிலும் தினமும் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தனர். பரிசுத்த பாப்பரசர் போல் அண்மையில் கவலை தெரிவித்து செய்தியொன்றும் அனுப்பியிருந்தார்.

### அதிர்ச்சியடைந்தனர்

சர்ச்சில் காலமான செய்தி இன்று அறிவிக்கப்பட்டதும் பலர் அதிர்ச்சியடைந்தனர். சர்ச்சில் வீட்டுக்கு வெளியே பிரார்த்தனை செய்துகொண்டிருந்த சிலர் மூர்ச்சையடைந்தனர். சர்ச்சில் தப்பிவிடுவார் என்று நம்பிக்கை கொண்டிருந்த இவர்கள் அன்னாரின் மறைவு குறித்து ஆழ்ந்த வருத்தம் கொண்டனர்.

## பல்கலைக்கழக இந்து சங்கம்

குரும்பசிட்டி, ஞாயிறு

பேராதனைப் பல்கலைக்கழக இந்து சங்கத்தின் 1965-1966ம் ஆண்டுக்குரிய நிர்வாகிகளைத் தெரிவுசெய்யுமுகமாகக் 'கலையரங்க'த்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

காப்பாளர்: திரு. என். நடராஜா (சட்டத்துறை விரிவுரையாளர்) தலைவர்: திரு. எம். கனகரத்தினம். உப தலைவர்: திரு சி. இராஜேந்திரா. செயலாளர்: திரு. என். சிவசரணமூர்த்தி. பெரும் பொருளாளர்: திரு. வி. செல்வநாயகம் (தமிழ் விரிவுரையாளர்). பொருளாளர்: செல்வி ஜெகதீஸ்வரி. பத்திராதிபர்கள்: திருவாளர்கள் இ. சிவானந்தன், ... [illegible]

# காஙு மந்திரிசபை

## துணைமந்திரிகள் நீக்கப்பட்டனர்

லண்டன், ஜன. 24

காங்கோ மந்திரிசபை இப்பொழுது திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. புதிய மந்திரிசபையில் துணைமந்திரிகள் எவரும் நியமிக்கப்படவில்லை.

காங்கோவில் அண்மையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளைத் தொடர்ந்து இந்த மாற்றம் இடம்பெற்றிருப்பதாக அவதானிகள் கூறுகின்றனர்.

காங்கோ பிரதமர் ஸ்ஹோம்பே புதிய மந்திரிசபையில் மேலதிக பொறுப்புகளை ஏற்றுள்ளார்.

# குண்டுவீச்சு விமானத்துக்கு 50 வியட்காங் துருப்புகள் பலி

சைகோன், ஜன. 24

தென்வியட்நாமின் தலைநகரான சைகோனின் தென்மேற்கே நூறுமைல் தூரத்தில் கம்யூனிஸ்ட் வியட்காங் துருப்புகளுக்கு எதிராக அரசாங்க துருப்புகள் மேற்கொண்ட தாக்குதலில் 50 வியட்காங் துருப்புகள் நேற்று மாண்டுவிட்டனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. 40 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலில், தென் வியட்நாம் அரசாங்க துருப்பினர், குண்டு வீச்சு விமானங்களையும் சக்தி வாய்ந்த இயந்திர துப்பாக்கிகளையும் உபயோகித்தனர் என்று சைகோனிலிருந்து வெளியாகும் செய்திகள் கூறுகின்றன.

இத்தாக்குதலில் அரசாங்க துருப்புகளில் இருவர் கொல்லப்பட்டனர் ஏழுபேர் காயமடைந்தனர்.

## மாயசக்தி...

(1-ம பக்கத் தொடர்ச்சி)

செய்தியில், "பல்துறைகளில் சிறப்புப் பெற்ற மாபெரும் ஆங்கிலேயர். அவர் மறைவு உலகுக்கே நஷ்டம்" எனக் கூறியிருக்கிறார்.

### ராஜாஜி

"அவரது சிறப்புக்கு எடுத்துக்காட்டாக இங்கிலாந்தும், ஐரோப்பாவும் வளமாக வாழ்கின்றன" என்றார் ராஜாஜி

## டெடிகமவில் யு. என். பி. நிலைமை

கொழும்பு, ஞாயிறு

டெடிகம தொகுதியில் டட்லி சேனநாயக்கா தோல்வியடைவார் என மார்க்ஸீயவாதிகள் பிரசாரம் செய்துவருகிறார்கள். ஆனால் டெடிகம தொகுதியிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களிலுள்ள 66 வட்டாரங்களில் 36 வட்டாரங்களில் யு. என். பி வெற்றியீட்டியுள்ளது என்று இங்கு நடைபெற்ற கூட்டத்தில் திரு. ஆர். பிரேமதாசா பேசும்போது கூறினார்.

## பொதுவிளையாட்டு மைதானம்

குரும்பசிட்டி, ஞாயிறு

மயிலிட்டி கிராமசபை தனது எல்லைக்குட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்களுக்கு உதவிசெய்யும் வகையில் பொது விளையாட்டு மைதானமொன்றினை அமைக்கவிருக்கின்றது. இதற்காக குரும்பசிட்டியில் மத்தியவைத்தியசாலைக்கு அருகாமையில் உள்ள பத்து பரப்பு காணியை வாங்க கிராமசபை முன்வந்துள்ளது. மத்திய அரசாங்கம் வழங்கியுள்ள நன்கொடைப் பணத்திலேயே விளையாட்டிடம் அமைக்கப்படவிருக்கிறது.

## ஷராவதி மின்திட்டம்

மைசூர், ஜன. 24

மைசூரில் ஷராவதி நீர்மின்சாரத் திட்டத்தை இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி இன்றுகாலை ஆரம்பித்து வைத்தார்.

இத்திட்டத்தை நிறைவேற்ற அமெரிக்கா அளித்த உதவிகளை பிரதமர் சாஸ்திரி பாராட்டிப் பேசினார்.

## வாளினால் வெட்டப்பட்டார்?

கொழும்பு, ஞாயிறு

நாரஹேன்பிட்டியாவைச் சேர்ந்த பி. எல். வில்பேட் சில்வா என்பவர் வாளினால் வெட்டப்பட்டு மரணமானார். இக் கொலை சம்பந்தமாக நால்வர் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

## கடற்கரை மணல் குவிந்தது!

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் திருவடிநிலைக்கு அருகாமையிலுள்ள வறுத்தோலை எனும் இடத்தில் நேற்று இரவு கடற்கரை மணல் சுமார் நூறு வண்டிலுக்குமேல் குவிக்கப்பட்ட பெரிய குவியல் ஒன்று காணப்படுகிறது. களவாக கடல் மணல் அள்ளும் கோஷ்டியினர் இரவு வேளையில் கடற்கரையோரத்திலுள்ள மணலை அள்ளி பக்கத்தேயுள்ள இடத்தில் குவித்து பின்னர் தமது தேவைக்கு ஏற்றாப்போல மணலை அள்ளுவதற்காகச் செய்யப்பட்ட செயல் என இதுபற்றி கருதப்படுகிறது. மணல் அள்ளும் கோஷ்டியினரைப் பிடிப்பதற்கு இராணுவத்தினர் காவல் போட்டும் மிகவும் துணிவாக மணல் அள்ளும் வேலை நடைபெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது.

## புடவைகள் மறைந்தன

இராமநாதபுரம், ஞாயிறு

கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த வட்டக்கச்சி குடியேற்றத்திட்டத்தில் உள்ள இராமநாதபுரம் வாலிபர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து சில தினங்களுக்கு முன் மக்களுக்கு கூப்பன்களுக்கு வழங்கும் புடவைகள் மாயமாய் மறைந்து விட்டன. இதை தொடர்ந்து விசாரணை நடந்தபோது அறைக் கதவுகள் எதுவும் திறக்காமல் இக்களவு நடந்தது எனக் கூறப்பட்டது. தொடர்ந்து விசாரணை நடைபெறுகின்றது.

## பகிஷ்கரிப்பு அதிகரிக்கப்படும்

லண்டன் ஜன. 26

தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கையைக் கண்டிக்குமுகமாக அந்த நாட்டுடனான வர்த்தகத்தை மேலும் பகிஷ்கரிக்க முயற்சி மேற்கொள்வதென்று ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம் முடிவு செய்துள்ளது.

## ஹிந்தி

லக்னௌ, ஜன. 24

ஹிந்தியை ஆட்சி மொழியாக்குவதால், இதர பிரதேச மொழிகள் பாதிக்கப்படமாட்டாது என்று இங்கு பேசிய உத்தர பிரதேச முதன் மந்திரி ஸ்ரீமதி சுசேதா கிருபளானி கூறினார். தி. மு. க. எதிர்ப்பு இயக்கம் பற்றிப் பேசுகையிலேயே இவ்வாறு அவர் கூறினார்.

கோயமுத்தூர், ஜன. 26

பிரதம மந்திரி திரு சாஸ்திரி அடுத்த மாதம் கோயமுத்தூருக்கு வரும்போது நகரசபை இவருக்கு வரவேற்பளிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org